**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.98/2020**

**PW5**

| | | |
|---|---|---|
| **Name** | : | மலர்கொடி |
| **Husband's Name** | : | ராஜ்குமார் |
| **Village** | : | கோணலூர் |
| **Taluk/District** | : | கீழ்பென்னாத்தூர் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.02.2026.

A1 ,2 and 8 present. A3 to 7 ,9 to 11 absent. Petition U/s. 317 filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோணலூரில் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளான அர்விந்த், சுமதி, பெருமாள் ஆகியோரை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத மற்ற 8 நபர்களையும் எனக்கு தெரியும். அ.சா.4 சுகந்தா என் தங்கை. அ.சா.1 சிவா மற்றும் அ.சா.2 விஜய் ஆகியோர் என் தங்கச்சி மகன்கள். அ.சா.3 தீபா என் மகள். 04.12.2015 அன்று மாலை 4.00 மணிக்கு பெருமாள், சுமதி, செல்வராஜ், ரமேஷ், ஆறுமுகம், கார்த்தி, அர்விந்த், சண்முகம், சீத்தாராமன், பாலு ,பிரகாஷ் ஆகியோர் அங்கு வந்து எங்கள் பட்டா நிலத்திற்கு கத்தி, கடப்பாரை, ராடு, கொம்பு, தடியுடன் வந்து நாங்கள் 17 வருடமாக வளர்த்த 63 தேக்குமரங்களை அடியோடு வெட்டிவிட்டார்கள். கும்பலாக எங்கள் வீட்டுபக்கமாக வந்து 12 அடி உயரம் 60 நீளமுள்ள புது சிமெண்ட் சுவரை இடித்துதள்ளிவிட்டார்கள். நானும், என் மகன்கள் சிவா, விஜய் , என் மகள் ஆகியோர் எல்லாரும் போய் கேட்டோம். அதற்கு எதிரிகள் அனைவரும் " ஒழுங்காக வீட்டை விட்டு காலி செய்துவிட்டு சென்றுவிடுங்கள் என்று மிரட்டி வாய்க்கு வந்தபடி திட்டினார்கள். பெருமாள் "கோர்ட்டில் இருக்கிற கேசை வாபஸ் ஒழுங்கு மரியாதையாக வாபஸ் வாங்கிக்கோ " என்றும் " நீ

எங்க போய் புகார் கொடுத்தாலும் எங்களை ஒரு மயிறும் புடுங்க முடியாது. ஏற்கனவே நாங்கள் RI மண்டைய உடைச்சவங்க " என்று மிரட்டினார்கள். இரண்டு நாட்களில் தார்ரோடு போட போரோம் என்று எங்கள் வீட்டை சுற்றி சுற்றி வந்து மிரட்டினார்கள். நாங்கள் பயந்துபோய் வீட்டிலேயே இருந்தோம். 05.12.2015 அன்று இரவு 8.35 மணிக்கு அ.சா.1 சிவா வேட்டவலம் காவல் நிலையத்திற்கு போய் எதிரிகள் மீது புகார் கொடுத்தார். 06.12.2015 அன்று போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** – நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.